பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 15] சென்னை: வைகாசி 7 (20—5—68) திங்கள் ★ வெளியூர்: வைகாசி 8 (21—5—68) செவ்வாய் [இதழ்: 281

கலப்புத் திருமணம்

முதலமைச்சர்கள் மாநாட்டில் அறிஞர் அண்ணா வலியுறுத்தல்

புதுடில்லி, மே 19—

"கலப்புத் திருமணத்தை ஊக்குவிக்க வேண்டும்; கலப்புத் திருமணம் செய்துகொள்வோருக்கு வேலைவாய்ப்பு அளிப்பதில் அரசு முதற் சலுகை அளிக்கவேண்டும்"

என்று முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், முதலமைச்சர்கள் மாநாட்டில் பேசுகையில் வலியுறுத்தினர்கள்.

"சாதி, வகுப்பு வேற்றுமைகளை ஒழித்துக் கட்டவும், வகுப்புவாத அடிப்படையிலான பிரச்சினைகள் தீரவும், கலப்புத் திருமணமே வழியாகும்"

என்ற முறையில் அண்ணா அவர்கள் இதனை வலியுறுத்தினர்கள்.

மும்மொழித் திட்டத்துக்கு கேரளம் எதிர்ப்பு

திருவனந்தபுரம், மே 20—

"மும்மொழித் திட்டத்தைக் கைவிட்டு, தமிழகம் போன்று இருமொழித் திட்டத்தை மேற்கொள்ள வேண்டும்"

எனக் கேரள அரசை, திருவனந்தபுரம் இந்தி எதிர்ப்புக் குழு கேட்டுக் கொண்டிருக்கிறது.

"பாடத் திட்டத்தில், மலையாளத்திற்கு முதலிடமும், ஆங்கிலத்துக்கு இரண்டாவது இடமும், தமிழ்—சமஸ்கிருதம்—கன்னடம் அல்லது அரேபிய மொழிக்கு மூன்றாவது இடம் தரப்பட வேண்டும்" என்றும் அக்குழு, கருத்துத் தெரிவித்திருக்கிறது.

'விருப்பப் பாடமாக இந்தி இருக்கலாம்' என்று கருத்துத் தெரிவித்துள்ள அக்குழு, 'எஸ். எஸ். எல். சி.-யில் ஏராளமானவர்கள் இந்தித் தேர்வில் தோல்வியடைவதால், இந்தியில் எவரையும் 'தோல்வி'யுற்றவராக மதிப்பிடக் கூடாது' என்றும் வற்புறுத்தியிருக்கிறது.

மொசாம்பிக் அகதிகளின் மறுவாழ்வுக்கு நிதியுதவி

புதுடில்லி, மே 20—

மொசாம்பிக்கிலிருந்து வெளியேறி வந்தவர்களின் மறுவாழ்வுக்கு உதவியளிப்பதென மத்திய அரசு முடிவு செய்திருக்கிறது.

ஒவ்வொரு குடும்பத்துக்கும் அதிகபட்சமாக ரூ. 5,000 தரப்படக்கூடும்.

நான்காம் திட்டத்தில் சேலம் உருக்காலை!

'நிச்சயம் இடம் பெறும்' என அண்ணா நம்பிக்கை

புதுடில்லி, மே 19—

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேலம் உருக்கு ஆலைத் திட்டம் இடம் பெறும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது" எனத் தமிழக முதலமைச்சர் அண்ணா அவர்கள் தெரிவித்தார்கள்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் இறுதி வடிவம் பெறும்வரை காத்திருப்பதாகவும், சேலம் உருக்காலைக்காக திரு. ஆர். வெங்கட்ராமன் தமிழகத் தொழிலமைச்சராக இருந்த காலத்தில் அவர் செய்த முயற்சியை, விட்ட இடத்திலிருந்து தொடர்ந்து மேற்கொள்ளவிருப்பதாகவும், மத்திய அரசுடன் அதுபற்றித் தொடர்ந்து பேச்சுவார்த்தைகள் நடத்தப்படும் என்றும் அண்ணா அவர்கள் செய்தியாளரிடம் கூறினர்கள்.

வெளிநாடுகளில் வாழும் இந்தியர்கள் இந்தியாவில் முதலீடு செய்ய ஊக்கமளிக்கப்பட வேண்டும் என்ற தமது யோசனைக்கு நிதியமைச்சர் மொரார்ஜி தேசாய் மிகவும் மதிப்பளித்திருப்பதாகவும் அண்ணா அவர்கள் கூறினர்கள்.

அண்மையில் தாம் ஹாங்காங் சென்றிருந்தபோது, அங்குள்ள இந்திய வணிகர்கள், இந்தியாவில் முதலீடு செய்வதாக உறுதிமொழியளித்திருப்பதாகவும், அவர்களுடைய உறுதிமொழியடங்கிய விண்ணப்பத்தைத் தாம் எதிர்பார்த்திருப்பதாகவும், அது வந்து சேர்ந்ததும் இதுபற்றி மொரார்ஜியுடன் மேலும் பேச்சு நடத்தப் போவதாகவும் அண்ணா அவர்கள் கூறினர்கள்.

குடியரசுத் தலைவர் ஆட்சி ரத்து

பன்சி லால், முதலமைச்சராகப் பதவியேற்க இயலும் வகையில், அரியானாவில், குடியரசுத்தலைவர் ஆட்சி ரத்தாகிறது.

ஆலைத் தொழிலாளர் வேலை நிறுத்தம் ஒத்திவைப்பு

அமைச்சர் கருணாநிதி தலையீட்டினையடுத்துத் தொழிற்சங்கங்கள் முடிவு

கோவை, மே 20—

இன்று இங்கு நடைபெறுவதாக இருந்த பஞ்சாலைத் தொழிலாளர்களின் பொது வேலை நிறுத்தம், மே 27-ஆம் நாளுக்குத் தள்ளிப் போடப்பட்டது.

இந்த் மஜ்தூர் சபா, அனைத்திந்திய தொழிற்சங்கக் காங்கிரசு முதலியவை அடங்கிய தொழிற்சங்கங்களின் கூட்டு நடவடிக்கைக் குழு நேற்று பிற்பகல் கூடி இவ்விதம் முடிவு செய்தது.

தமிழக அரசின் பொதுப் பணித்துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள், மேற்படிக் குழுச் செயலாளருடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பேசியதாகவும், வாரத்தில் இரண்டு நாள் 'லே-ஆப்' விடும் தென்னிந்திய ஆலை உரிமையாளர் சங்கத் திட்டம் திரும்பப் பெறப்படும் என்றும், மூடிய ஆலைகளைத் திறக்க அரசு உறுதியான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளும் என்றும் அமைச்சர் உறுதி கூறியதாகவும்,

(4-ம் பக்கம் பார்க்க)

தமிழகத்திற்கு

அறிஞர் அண்ணா தரும் தொழில் திட்டங்கள்

நிறைவேறினல் மகிழ்ச்சியடைவேன் என்கிருர் தலைமையமைச்சர்

சென்னை, மே 19—

தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் அண்மையில் மேற்கொண்ட வெளிநாட்டுச் சுற்றுப்பயணத்தினையடுத்து, தமிழகத்தில் வெளிநாட்டு ஒத்துழைப்புடன் பல்வேறு திட்டங்களையும் நிறைவேற்றுவதற்கான யோசனைகளைத் தெரிவித்திருப்பதுகுறித்து தலைமையமைச்சர் இந்திரா காந்தியைச் செய்தியாளர்கள் கேட்டனர்.

திருமதி இந்திரா காந்தி சிங்கப்பூருக்கு விமானம் ஏறுமுன் அவரைச் செய்தியாளர்கள் சந்தித்தனர்; அப்போதுதான் அண்ணாவின் யோசனைகளை அவரது கவனத்துக்குக் கொண்டுவந்தனர்.

அதற்கு இந்திரா காந்தி பதிலளிக்கும் வகையில் கூறியதாவது:—

"அந்தத் திட்டங்கள் முழுமையுமோ அல்லது அவற்றில் சிலவோ செயல்படுத்தப்படுமானல் நான் மிகவும் மகிழ்ச்சியடைவேன். ஆனல், அதற்கு முன்னதாக, அந்தத் திட்டங்களையெல்லாம் தொடர்புடைய அமைச்சுத் துறைகள் பரிசீலித்தாக வேண்டும்.

"திரு. அண்ணாதுரை இதுபற்றித் தொடர்புடைய அமைச்சர்களுடன் கலந்தாலோசித்திருப்பார் எனக் கருதுகிறேன்.

"தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் முதலமைச்சருடன் சிறிதுநேரமே இதுபற்றி விவாதித்தேன்."

கல்பாக்கம் அணுமின்சாரத் திட்டம்

பணிகள் பற்றி அக்கறையுடன் கேட்டறிந்தார் இந்திரா

சென்னை, மே 20—

சிங்கப்பூருக்குச் செலலும் வழியில் சென்னையில் தங்கிய தலைமையமைச்சர் இந்திரா, கல்பாக்கம் அணுமின்சாரத் திட்டப் பணிகள் பறறி, திட்ட அதிகாரிகளிடம் அக்கறையுடன் கேட்டறிந்தார்.

திட்டப் பகுதிக்குப் பின்னர் வருகை தரப்போவதாக அவர் தெரிவித்தார்.

மாநிலந்தோறும் முளைத்துக்கொண்டிருக்கும்

தேச விரோத 'சேனை'கள்!

தடுத்து ஒழிக்க அறிஞர் அண்ணா கூறும் வழி!

உள்துறை அமைச்சருக்குச் சில யோசனை

புதுடில்லி, மே 19—

முதலமைச்சர்கள் மாநாட்டில் அண்ணா அவர்கள் பொதுவாக நாட்டில் உள்ள வகுப்புவாதப் பிரச்சினைகள் குறித்துப் பேசுகையில், 'தமிழகத்தைப் பொறுத்த வரையில் அங்கு எந்தவித வகுப்புப்பூசலும் கிடையாது' என்று தெரிவித்தார்.

"தமிழ்நாட்டில் உள்ள சிறுபான்மை வகுப்பினருக்கு, உத்தியோகத் துறையில் அரசியல் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள எல்லா உரிமைகளும் அளிக்கப்படுகின்றன" என்ருர் அண்ணா.

"ஒவ்வொரு வகுப்பையும் தனித் தனியாகப் பிரித்து வைப்பதை விடுத்து, எல்லா வகுப்புக்களையும் ஒன்ருக இணைக்க அரசு முயற்சி செய்ய வேண்டும்" என்று அண்ணா அவர்கள் வற்புறுத்தினர்.

முதலமைச்சர்கள் மாநாட்டின் இன்றைய நிகழ்ச்சிகளில் அண்ணா அவர்கள் பேச்சுதான் முக்கிய இடம் பெற்றது.

பல்வேறு மாநிலங்களிலும் தோன்றியுள்ள 'சேனை'களின் நடவடிக்கைகளை கடுமையாகக் கண்டித்து அண்ணா உரையாற்றினர்.

"நாட்டு விரோத நடவடிக்கைகளில் ஈடுபடும் இத்தகைய 'சேனை'களைத் தடை செய்யவேண்டும்" என்றும் அண்ணா அவர்கள் கருத்தறிவித்தார்கள்.

அண்ணா அவர்கள் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"இந்தச் 'சேனை'களின் தலைவர்களையெல்லாம் டெல்லிக்குத் தருவித்து, 'எதற்காக இந்தச் சேனைகள் துவக்கப்பட்டன' என்பது குறித்து உள்துறை அமைச்சர், அவர்களுடன் விவாதிக்க வேண்டும்.

அந்தச் சேனைகளில் ஏதாவது நாட்டு விரோதக் கொள்கையுடையதாக இருப்பின், அந்தக் கொள்கையை மாற்றிக் கொள்ளும்படிக் கூற வேண்டும். அதே நேரத்தில் உள்துறை அமைச்சர், அந்தச் 'சேனை'கள் முறையான வழிகளில் இயங்க வழிகாட்ட வேண்டும்.

இந்தச் 'சேனை'களின் தலைவர்கள், தங்களுக்குள் வட்டார வெறிநோக்கைத் தவிர்க்கும் வகையில் ஓர் ஒழுக்கநெறியை வகுத்துக்கொள்ள முன்வர வேண்டும்.

இவ்வளவுக்குப் பிறகும் ஒரு சமூகத்தினருக்கு விரோதமான காரியங்களில் இன்னெரு சமூகத்தினர் ஈடுபடக்கூடியவகையில், இந்தச் சேனைகளின் நடவடிக்கைகள் இருக்குமானல், அப்போது அத்தகைய 'சேனை'க்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசுக்குப் பொதுமக்களின் தார்மீக ஆதரவு கிட்டும்."

நம் நாடு
ஆசிரியர்: இரா. செழியன்

திருவள்ளுவராண்டு 1999 வைகாசி 7 (20—5—68) திங்கள்

இன்னும் எத்தனை நாளைக்கு?

அரியாணாவில் நடைபெற்ற இடைத் தேர்தலில் காங்கிரசுக் கட்சிக்குப் பெரும்பான்மை கிடைத்திருக்கிறது. தேர்தலுக்கு முன்னரே காங்கிரசு மேலிடம் இம்முடிவை எதிர்பார்த்திருக்கிறது.

காங்கிரசுக்குப் பெரும்பான்மை கிடைத்ததைக் கண்டதும், அனைத்திந்தியக் காங்கிரசுத் தலைவர் பூரிப்படைந்திருக்கின்றார். அதுபோன்றே, தலைமை அமைச்சர் இந்திரா காந்தியும் மகிழ்ச்சியடைந்துள்ளார்.

இந்த இடைத் தேர்தலில், கட்சி விட்டுக் கட்சி மாறுகின்ற அரசியல் பச்சோந்திகள் பலரும் படுதோல்வியடைந்திருக்கின்றனர். 'கட்சி விட்டுக் கட்சி மாறுகின்றவர்களை, அரசியல் பொதுவாழ்விலிருந்து விரட்ட வேண்டும்' என்ற அளவுக்கு அரியாணா வாக்காளர்கள் விழிப்புணர்ச்சி பெற்றிருப்பது பாராட்டி வரவேற்கத்தக்கதாகும்.

'கட்சி விட்டுக் கட்சி மாறுவதைத் தடுத்துநிறுத்த, ஏற்றதொரு சட்டத்தை இயற்ற வேண்டும்' என்பது பற்றி இந்திய அரசு ஆராய்ந்துகொண்டிருக்கிறது. ஆனால், இயற்றப்படக்கூடிய சட்டம் எத்தகையதாக இருந்திட்டாலும், அச்சட்டத்தைவிட, கட்சி மாறுகின்ற அரசியல் புல்லுருவிகளைப் பொதுவாழ்விலிருந்து விரட்டியடிக்கக்கூடிய ஆற்றல் வாக்காளர்களுக்குத்தான் இயல்பாக உண்டு என்பதை அரியாணா வாக்காளர்கள் இந்த இடைத் தேர்தல் மூலம் மறுப்புக்கு இடமில்லாமல் உறுதி செய்திருக்கின்றனர்.

அரியாணாவில் காங்கிரசுக் கட்சிக்குப் பெரும்பான்மை கிடைத்துவிட்டதைக் கண்டு, தலைமை அமைச்சர் முதற்கொண்டு அ. இ. காங்கிரசுத் தலைவர் வரையில் மகிழ்ச்சியடைந்திருப்பதில் பொருளுண்டு. 'காங்கிரசுக் கட்சிக்குப் புதிய வலிவு கிடைத்துவிட்டிருக்கிறது' என அவர்கள் எண்ணிக்கொள்ளுவதிலும் தவறில்லை. ஆனால், 'அரியாணாவில் இனி நிலையான ஆட்சியைக் காங்கிரசுக் கட்சியால் உருவாக்க முடியும்' என அவர்கள் நம்பிக்கை கொள்ளுவதற்குப் போதிய நியாயமிருக்கிறதா என்பது கேள்விக் குறியே ஆகும்.

இக்கேள்விக் குறிக்கு 'ஆம்' என்றோ, 'இல்லை' என்றோ இப்பொழுது எவராலும் பதில் கூற முடியாது. இதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

அரியாணா வாக்காளர்களைப் பொறுத்த வரையில், அவர்கள் 'கட்சி விட்டுக் கட்சி மாறுகின்றவர்களைப் பொதுவாழ்வில் ஒளிபட வாழ விடாமல் ஒதுக்கித்தள்ள வேண்டும்' என்ற முடிவுக்கு வந்துவிட்டனர் என்பது, இந்த இடைத் தேர்தல் மூலம் உறுதியாகிவிட்டது. ஆனால், காங்கிரசுக் கட்சியின் சார்பில் வெற்றி பெற்றிருக்கின்ற 48 சட்டமன்ற உறுப்பினர்கள் அத்தனைப் பேரும் கட்சி விடடுக் கட்சி மாறுவதை அரசியல் ஒழுக்கக்கேடாகக் கருதுவர் எனக் கொள்ள முடியாது. பதவி கிடைக்கப்பெறுமல் ஏமாற்றம் ஏற்படுகின்றபொழுது, கட்சி மாறுகின்ற போக்குடையவர்கள் இன்னமும் இருக்கத்தான் செய்வர் என எதிர்பார்ப்பது இயல்பே ஆகும்.

குறிப்பிட்ட ஒரு கட்சியின் பெயரால் தேர்ந்தெடுக்கப்படுகின்ற ஒருவர், ஏன் வேறு கட்சிக்குத் தாவுகிறார்—எப்பொழுது அவருக்குக் கட்சி மாறும் நினைப்புப் பிறக்கிறது என்பதை ஆராய்ந்தால், உள்ள சில காரணங்களில் 'எதிர்பார்த்தது கிடைக்காததனால் ஏற்படக்கூடிய ஏமாற்றமே தலைசிறந்த காரணம்' என்பது புலப்படும்.

பகவத் தயாள் சர்மா என்பவர், குடுப்பிடத்தகுந்த காங்கிரசுத் தலைவர்களில் ஒருவர். இடைத் தேர்தலில் காங்கிரசு வேட்பாளராகப் போட்டியிட அவருக்கு வாய்ப்பே அளிக்கப்படவில்லை. இருந்தாலும், இடைத் தேர்தலில் வெற்றிபெற்றுள்ள 48 காங்கிரசு உறுப்பினர்களுள் 30 உறுப்பினர்கள், 'அவர்தான் கட்சியின் தலைவராக இருக்க வேண்டும்' என எழுத்துமூலம் கோரிக் கொண்டிருக்கின்றனர். ஆனால் அக்கோரிக்கையைக் காங்கிரசு மேலிடம் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என்பது தெளிவாகிவிட்டது.

வெற்றிபெற்ற மொத்தக் காங்கிரசு உறுப்பினர்களில் பெரும்பான்மையினர், குறிப்பிட்ட ஒருவர்தான் தலைவராக இருக்கவேண்டும் என விரும்புகின்றனர். அந்த விருப்பத்தை ஏற்றுக்கொள்ள விரும்பாமல், வேறு ஒருவரைத் தலைவராகத் திணிக்கக் காங்கிரசு மேலிடம் முனைந்துவிட்டிருக்கிறது. இதன் விளைவு, காலப்போக்கில் எப்படி உருவெடுக்கும்?

சென்ற பொதுத் தேர்தலிலும் அரியாணாவில் காங்கிரசுக் கட்சிக்குத்தான் பெரும்பான்மை கிடைத்தது. இடைத் தேர்தல் முடிவுபோலவே 48 உறுப்பினர்கள்தான் பொதுத் தேர்தலிலும் வெற்றிபெற்று அரியானாவில் ஆட்சி அமைத்தனர். அந்த ஆட்சி சரியாக 12 நாட்கள்தான் உயிரோடு இருந்தது.

அதற்குப் பின்னர், வீரேந்திர சிங் தலைமையில் 12 உறுப்பினர்கள் காங்கிரசுக் கட்சியைவிட்டு வெளியேறி எதிர்க் கட்சியில் சேர்ந்தனர். வீரேந்திர சிங் முதலமைச்சராக இருந்து ஆட்சிப் பொறுப்பை ஏற்றார்.

இனி, அதே வரலாறு அரியாணாவில் திரும்பாது இருக்க வேண்டும். ஆனால், திரும்பாது என்பதை எப்படி நம்புவது? எனவே, இப்பொழுது அமையக்கூடிய காங்கிரசு ஆட்சி, 'எத்தனை நாளைக்கு?' என்ற கேள்விக் குறியுடனேயே அமையப்போகிறது என்பதை மறைப்பதற்கில்லை.

'அரியாணாவில் காங்கிரசு ஆட்சி எத்தனை நாளைக்கு?' என்ற கேள்வி, காங்கிரசு மேலிடத்தின் மண்டையைக் குடைந்து கொண்டுதான் இருக்கப்போகிறது.

—கா. க.

கோவை பஞ்சாலைகளுக்கு நிவாரணம்

நூல் ஏற்றுமதி மீதான விற்பனை வரி உடனடியாக ரத்து

கைத்தறித் துணிகளுக்கு 10 சதவீதம் தள்ளுபடி

தமிழக அரசின் நடவடிக்கைகள் பற்றி முதலமைச்சர் அண்ணா

புதுடில்லி, மே 20—

"கோவையில் உள்ள பஞ்சாலைகளுக்கு நிவாரணம் அளிப்பதற்குப் பல நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளப் போகிறேன்" என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள் அறிவித்தார்.

"நூல் ஏற்றுமதி மீதான விற்பனை வரியை உடனடியாகத் திரும்பப் பெறுமாறு தமிழக அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது" எனத் தெரிவித்தார்.

"கூட்டுறவுச் சங்கங்கள் விற்பனை செய்யும் கைத்தறித் துணிக்கு மே 25-ம் நாள் முதல் 15 நாட்களுக்கு 10 சதவிகிதம் தனித் தள்ளுபடி தருமாறு உத்தரவிட்டிருக்கிறேன்" எனக் குறிப்பிட்டார்.

"மூடப்பட்ட ஆலைகள் மீண்டும் திறக்கப்பட்டு—இலாபகரமாக நடைபெற்று—சம்பந்தப்பட்ட தொழிலாளர்களின் தொல்லைகள் தீரவேண்டுமென்பதில் எனக்குப் பெரும் அக்கறை உண்டு" என்று தெளிவுபடுத்தினார்.

"சுமார் 3,500 தொழிலாளர்கள் பணியாற்றும் 6 ஆலைகளை மேற்கொள்ளும் பொருட்டு, தொழில் வளர்ச்சி—ஒழுங்குமுறை சட்டத்தின்கீழ் விசாரணைக்கு உத்தரவிட மத்திய அரசு ஒப்புக்கொண்டிருக்கிறது" என்றும் தெரிவித்தார்.

மூடப்பட்ட ஆலைகளின் நிலையை ஆராயக் குழு

தமிழக அரசின் யோசனையை மத்திய அரசு ஏற்றது

"தமிழ்நாட்டில் தற்போது மூடப்பட்டுள்ள ஆலைகளின் நிலைமையை ஆராய்வதற்கு மூவர் கொண்ட விசாரணைக் குழு ஒன்றை நியமிக்க வேண்டும்"

என்ற தமிழக அரசின் யோசனையை, மத்திய அரசு ஏற்றுக் கொண்டுவிட்டது.

எடுக்கவேண்டிய நடவடிக்கைகளைச் சிபாரிசு செய்யும் பொருட்டு, அந்த ஆலைகளின் நிலைமைகளை குழு ஆராயும்.

விரைவில் இக்குழு, தனது சிபாரிசுகள் கொண்ட அறிக்கையை மத்திய அரசுக்கு அளிக்கும்.

குழுவின் உறுப்பினர்களாக கே. சீனிவாசன், ஏ. கே. ஏகாம்பரம், ஆர். சேஷாத்திரி ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மூடப்பட்ட ஆலைகள் வருமாறு:—

கோவை ரங்க விலாஸ் ஆலை; கோவை கிருஷ்ணவேணி நூற்பாலை; கோவை ராதிகா ஆலை; கோவை முருகன் ஆலை; செங்கோட்டை பலராம வர்மா நூற்பாலை; பழனி முருகன் நூற்பாலை.

நெருக்கடி நீங்க அண்ணா முயற்சி

"விசாரணை நடத்தும் ஆலைகளை இறுதியில் மேற்கொள்ளுவது சம்பந்தமாக ஏற்படும் நிதிப் பொறுப்புக்களை மத்திய அரசுடன் சமமாகப் பகிர்ந்து கொள்ள மாநில அரசு ஒப்புக் கொண்டிருக்கிறது"

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள் தெரிவித்தார்; அவர் மேலும் கூடுயிருப்பதாவது:—

★ ஆலைகளில் வாரந்தோறும் கூடுதலாக இரு தினங்கள் விடுமுறைவிடும் ஏற்பாட்டை தென்னிந்திய ஆலைச் சொந்தக்காரர்கள் சங்கத்தைச் சேர்ந்த எல்லா ஆலைகளும் உடனடியாகக் கைவிட்டு விடும் என்று அந்தச் சங்கத்தின் தலைவர் என்னிடம் நேரில் உறுதியளித்தார்.

★ நிதி வசதி தேவைப்படும் ஆலைகளுக்கு மாநில அரசு உத்தரவாதம் அளிக்கத் தயாராயிருக்கிறது; அந்த உத்தரவாதத்தை ஆதரவாகக் கொண்டு அவைகள், பாங்கிகளிடமிருந்து கடன் வசதி பெற முயலலாம்.

★ தென்னிந்திய ஆலைச் சொந்தக்காரர்கள் சங்கம், தன் கீழுள்ள ஆலைகளிடமிருந்து நூல் வாங்குவதற்காக, அதற்கு 5-கோடி அளவுக்குக் கடன் வசதி அளிப்பதென்று மத்திய அரசு முடிவு செய்திருக்கிறது; நூல் மார்க்கெட்டில் ஏற்பட்டுள்ள தேக்கத்தை ஓரளவுக்குக் குறைக்க இது உதவும்; ஆலைகளுக்குத் தேவைப்படும் நடைமுதல் மூலதனத்துக்கு வழி செய்யவும் இது உதவும்.

★ விசை உதவியின்றி சலவை (பிளீச்சிங்) செய்யப்பட்ட கைத்தறித் துணிகளுக்குக் கேலண்டரிங் செய்வதன்மீது (பளபளப்பாக்கும் தொழில்) அண்மையில் 'எக்சைஸ்' வரி விதிக்கப்பட்டிருந்தது. அதை மத்திய அரசு நீக்கிவிட்டது.

★ ஏற்றுமதிக்கு ரொக்கச் சலுகைகள் அளிக்கும் திட்டத்தை, நூல், துணி -- குறிப்பாகக் கைத்தறித் துணி ஏற்றுமதிக்கும் மத்திய அரசு விரிவுபடுத்தியிருக்கிறது.

நல்லெண்ணச் சூழ்நிலை தோன்றுவது அவசியம்

"இந்த நடவடிக்கைகள், ஆலைத் தொழிலில் காணப்படும் நிலைமை முன்னேற்றமடைய கணிசமாக உதவுமென்பதில் எனக்குச் சந்தேகம் ஏதும் இல்லை.

"நிலைமையில் முன்னேற்றம் காண அவ்வப்போது தேவைப்படும் நடவடிக்கைகளை மத்திய அரசு ஒத்துழைப்புடன் எடுத்துக்கொள்ளவும் நான் தயாராக இருக்கிறேன்.

இந்த நடவடிக்கைகளின் முழுப் பலனையும் கண்கூடாகக் காண்பதற்குச் சிறிது காலம் பிடிக்கும். இதற்கிடையில், தொழிலாளர் — நிர்வாகிகள் —அரசு ஆகிய சம்பந்தப்பட்ட தரப்பினர், நல்லெண்ணமும் அனுதாபமும் நிறைந்த சூழ்நிலையைப் பேணிவர வேண்டும்:"

தலைமையமைச்சர் இந்திரா தகவல்

சிங்கப்பூருக்குச் செல்லும் வழியில் சென்னைக்கு வருகைதந்த தலைமையமைச்சர் இந்திராவின் கவனத்திற்குக் கோவை ஆலை நெருக்கடியும், வேலைநிறுத்த அச்சுறுத்தலும் கொண்டுவரப்பட்டது; 'இதுபற்றி தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்திலும் தெரிவிக்கப்பட்டது; தமிழக முதலமைச்சர், ஏற்கனவே இதுபற்றி மத்திய அரசிடம் எடுத்துக் கூறியுள்ளார்; தொடர்புள்ள அமைச்சரிடம் தனியாக அவர் பேச்சுவார்த்தை நடத்துகிறார்' என்று இந்திரா விளக்கிக் கூறினார்.

வர்த்தக அமைச்சருடன் அண்ணா சந்திப்பு

புதுடில்லி, மே 19—

முதலமைச்சர் அண்ணா அவர்கள், இன்று காலை இங்கு வர்த்தக அமைச்சர் தினேஷ் சிங்கை சந்தித்தார்.

தென்னகத்தில் பஞ்சாலைகள் சீரான நிலையில் இயங்கிவருமாறு செய்ய நீண்டகாலத் திட்டங்கள் பற்றி மத்திய அமைச்சருடன் அவர் விவாதித்தார்.

"பஞ்சாலைகளுக்கு அடிக்கடி ஏதாவது ஒரு நெருக்கடி ஏற்பட்டு வருகிறது" என்பதை அண்ணா அவர்கள் சுட்டிக்காட்டினார்.

ரூ. 50 இலட்சம் நிதியுதவி

தமிழக அரசுக்கு ரூ. 50 இலட்சம் நிதி உதவுமாறு மத்திய அரசை அவர் கேட்டுக் கொண்டார்.

"அதிக அளவு நூலை வாங்கி—நூல் மார்க்கெட்டில் மந்தநிலை ஏற்படாது தடுக்கும் பொருட்டு தலைமைக் கூட்டுறவு சங்கங்களுக்கு இத்தொகையை அளித்து உதவலாம்" என்று அவர் யோசனை தெரிவித்தார்.

இத்தொகையைக் கொடுத்துதவ மத்திய அமைச்சர் ஒப்புக் கொண்டுவிட்டதாகத் தெரிகிறது.

அமைச்சர் குறைபாடு-- அண்ணா தந்த உறுதி

"தென்னகத்திலுள்ள ஆலைகள் தரமுள்ள நூலை உற்பத்தி செய்ய வேண்டும்" என்று, அமைச்சர் தினேஷ் சிங் யோசனை தெரிவித்தார்.

"தற்போதுள்ள நூலின் தரம் நன்றாக இல்லை; தரத்தை வளரச் செய்தால், அந்நூலை இலங்கை, இந்தோனேசியா, மலாசியா ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யலாம்; இந்நாடுகளில் நல்ல தரமுள்ள நூலுக்கு கிராக்கி உள்ளது" என்று மத்திய அமைச்சர் குறிப்பிட்டார்.

"இதுபற்றி ஆலை அதிபர்களுடன் விவாதிக்கிறேன்" என்று அண்ணா அவர்கள் உறுதியளித்தார்.

விசித்திர நிலை!

ஷில்லாங், மே 20—

அசாமில் சில துவக்கப் பள்ளிகள், நாள்தோறும் ஒரு மணி நேரம்கூடத் திறந்திருப்பது கிடையாதாம்!

கல்வித் தணிக்கை அதிகாரிகளின் அனுபவம் இதுவாம்!

சில பள்ளிகளில், பத்து அல்லது பன்னிரண்டு மாணவர்கள்கூட இருக்கமாட்டார்களாம்!

பெரும்பாலான பள்ளிகளில், ஆசிரியர்களின் எண்ணிக்கைதான் அதிகமாக இருக்குமாம்!

மலைப்பாங்கான இடங்களில் உள்ள உயர்நிலைப் பள்ளிகளுக்கு விஞ்ஞான ஆசிரியர்கள் கிடைப்பதில்லையாம்!

மலிவான விலையில் கருத்தடை உறைகள்

புதுடில்லி, மே 20—

'கன்டம்' என்ற கருத்தடை ரப்பர் உறைகளை, சாதாரணக் கடைகள்மூலம் பெரும் அளவில் விற்பனை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுவருகிறது.

மலிவான விலையில் மூன்று உறைகள், 15-காசுகளுக்கு விற்கப்படும் எனத் தெரியவருகிறது.

வளமை ஏற்படும் வகையில் திட்டம் தயாரிக்குமாறு ஆணை

முதலமைச்சர்கள் கூறிய கருத்துக்களை கவனத்தில் கொள்ளுமாறு வற்புறுத்தல்

புதுடில்லி, மே 18—

தேசிய வளர்ச்சிக் குழுவின் இரண்டு நாள் கூட்டத்தில், திட்டக் குழு தயாரித்தளித்த நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முன்னோட்டக் குறிப்புக்கு பொதுப்படையாக ஒப்புதல் அளிக்கப்பட்டது.

பொருளாதாரத்தில் 5-சதவிகிதம் முதல் 6-சதவிகிதம் வரையில் வளர்ச்சி விகிதத்தை எய்துவதுதான் திட்டத்தின் நோக்கமாகும்; இதற்கு மாநில முதலமைச்சர்கள் ஒப்புதல் அளித்தனர்.

விவசாயத் துறையில் 5-சதவிகிதம் பொருளாதார வளமையும், தொழில் துறையில் 8 முதல் 10 சதவிகிதம் வரையில் வளமையும் ஏற்படும் வகையில் திட்டத்தைத் தயாரிக்குமாறு திட்டக் குழு கேட்டுக்கொள்ளப்பட்டது; சராசரி வளர்ச்சி விகிதம் 6-சதவிகிதமாக அமைய வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளப்பட்டது.

நிதி வசதிகளைத் திரட்டுவது சம்பந்தமான செயற்குறிப்பு ஒன்றைத் தயாரிக்கும் பணியும் திட்டக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

“திட்டத்தை வகுப்பதில், திட்டக் குழுவின் முன்னோட்டக் குறிப்பை மட்டுமன்றி முதலமைச்சர்கள் வெளியிட்ட கருத்துக்களையும் கவனத்தில் கொள்ளவேண்டும்” என்று கேரள முதலமைச்சர் வற்புறுத்தினர்.

வேளாண்மையில் விஞ்ஞானத்தைப் பயன்படுத்துவதன் பலன்

பல கோடி மக்களுக்கு உணவு வழங்கும் சாதனை

அமெரிக்காவில் பண்ணைகளின் எண்ணிக்கை குறைவு; ஆனால் அவற்றின் பரப்புப் பெரிது.

1959 முதல் பண்ணைகள் தொகை கால் பங்கு குறைந்துவிட்டதாக அமெரிக்க வேளாண்மைத் துறை தெரிவிக்கிறது.

1967-ல் அமெரிக்கப் பண்ணைகளின் எண்ணிக்கை 31,46,000; இது முந்திய ஆண்டிலிருந்த எண்ணிக்கையைக் காட்டிலும் 3 சதவீதம் குறைவு. 1968 இறுதிவாக்கில் பண்ணைகளின் எண்ணிக்கை மேலும் கிட்டத்திட்ட ஓர் இலட்சம் குறையும்.

1959-ல் ஒரு சராசரிப் பண்ணையின் பரப்பு 288 ஏக்கர்; ஆனால், 1967-ல் சராசரிப் பரப்பு 369 ஏக்கராக உயர்ந்துள்ளது. சிறிய பண்ணைகள் குறைந்து பெரிய பண்ணைகளாக மாறிவருகின்றன.

பண்ணைகள் எண்ணிக்கை குறைவாக இருப்பினும் நாட்டின் விளைபொருள் உற்பத்தித் திறன் உச்சமாகவே இருந்துவருகிறது. நாட்டின் 20 கோடி மக்களுக்கும், உலகிலுள்ள உணவுப் பற்றுக்குறை நாடுகளில் பல கோடிக் கணக்கான மக்களுக்கும் உணவு வழங்கி வருகின்றனர்—அமெரிக்கக் குடியானவர்கள்.

வேளாண்மையில் விஞ்ஞானத்தைப் பயன்படுத்துவதாலேயே விளைச்சல் மிக அதிகமாக இருந்து வருகிறது.

அணு மின்சார மாநாடு

இந்தியாவும் கலந்துகொண்டது

இலண்டன், மே 20—

அணுசக்தியிலிருந்து மின்சாரம் தயாரிப்பது பற்றிய மாநாடு ஒன்று இலண்டனில் ஆரம்பமாயிற்று; இம்மாநாட்டில் இந்தியாவும் கலந்து கொண்டது.

சென்ற பிப்ரவரி மாதத்தில் பிரிட்டனில் ஒரு புது மின்நிலையம் துவக்கப்பட்டது. 100 மெகாவாட் திறனுள்ள இந்நிலையத்தில் அணு சக்தியிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. மிக எளிதாக, சிக்கல் இல்லாத முறையில், அதே நேரத்தில் சிக்கனமாக இந்தவகையான மின் நிலையங்கள் அமைக்கப்படுவதால் வெளிநாடுகளில் பல இந்த முறையில் அக்கறை கொண்டுள்ளன.

குறிப்பாக மின்சார பற்றுக்குறையுள்ள நாடுகள்—மின்விசை உற்பத்தியை அதிகரிக்க முயற்சி செய்துவரும் நாடுகள் இதில் அதிக அக்கறைகொண்டுள்ளன.

இம்மாநாட்டில் இந்தியா, பிரிட்டன் உள்பட 18 நாடுகள் கலந்து கொண்டன.

பவுன் மதிப்புக் குறைப்புக்குக் கைமேல் பலன்!

பிரிட்டிஷ் நிதித்துறை அறிவிப்பு

இலண்டன், மே 20—

“பவுனின் மதிப்பைக் குறைத்த பிறகு, வெளிநாடுகளில் பிரிட்டிஷ் பொருள்களுக்கு கிராக்கி அதிகரித்துள்ளது; ஏற்றுமதியும் ஏறுமுகமாயிருக்கிறது; பவுன் மதிப்பைக் குறைத்தது பலனளிக்கத் தொடங்கியுள்ளது” என்று லண்டனில் நிதித்துறை அறிவித்துள்ளது.

“எல்லாத் துறைகளிலும் ஏற்றுமதி பெருகிவருவதால் உற்பத்தியும் உயர்ந்து வருகிறது; குறிப்பாக, மோட்டார் கார், உருக்கு ஆகியவற்றின் உற்பத்தி மிக அதிக அளவில் பெருகி ஏற்றுமதியாகியுள்ளது. துணி ஏற்றுமதி, கப்பல் தொழில், இயந்திரக் கருவிகள் ஏற்றுமதி ஆகியவற்றின் நிலவரமும் திருப்திகரமாயுள்ளது” என்று அந்த அறிவிப்பு மேலும் கூறுகிறது.

அரூரில் பாவேந்தர் விழா

அரூர் தமிழ் வளர்ச்சி மன்றச் சார்பில் 7—5—68 அன்று பாவேந்தர் நான்காவது ஆண்டு நினைவு நாள் விழா நடைபெற்றது; விழாவிற்குத் திரு. பெருஞ்சித்திரனார் தலைமைவகித்தார்.

புலவர் இரா. எழில்நிலவனார், ‘புரட்சிக் கவி’ என்னும் தலைப்பில் சொற்பொழிவாற்றினார்.

தொடர்ந்து நடைபெற்ற பட்டிமன்றத்தில், ‘பாவேந்தர் இயற்கைப் பாவலரா? சூழ்நிலைப் பாவலரா?’ என்னும் தலைப்பில், ‘இயற்கைப் பாவலரே’ என்பதனை வலியுறுத்தி திரு. மொ. காளியப்பன் எம்.ஏ.பி.டி., புலவர்கள் ஐயாத்துரை, துரை. கணேசன், நாராயணசாமி ஆகியோரும்; ‘சூழ்நிலைப் பாவலரே’ என்பதனை வலியுறுத்தி புலவர்கள் இரா. எழில்நிலவனார், முத்தையன், சிரத்தினவேலு, குலோத்துங்கன் ஆகியோரும் வாதிட்டுப் பேசினர்.

தலைவர் தமது முடிவுரையில், ‘பாவேந்தர் இயற்கைப் பாவலரே’ என்றும், ‘அவர், பிற புலவர்களைப் போலன்றிச் சூழ்நிலையை ஊன்றிக் கண்டு அவற்றிலுள்ள குறைபாடுகளை அஞ்சாது கண்டித்துப் பாப் புனைந்தார்’ என்றும், அதனாலேயே அவர், ‘பாவேந்தர்’ என்னும் சிறப்புப் பெயரைப் பெற்றார் என்றும் கூறினார்.

மன்றத் தலைவர் அ. வெ சிவரங்கன் பி.ஏ.பி.டி. விழாவிற்கு வருகை புரிந்தோரை வரவேற்றார்.

இறுதியில், மன்றச் செயலாளர் புலவர் ஆ. திருமொழி நன்றி கூறினார்.

தமிழ் வளர தலைக்கு ஒரு ரூபாய்!

அமைச்சர் முத்துசாமி யோசனை

“மறைமலையடிகள் பதினேழு ஆண்டுகளுக்குமுன் மறைந்துவிட்டாரென்றாலும், இன்று வாழ்கின்ற பெரும் புலவர்களுடைய வடிவிலே இன்னும் அவர் வாழ்கின்றார். அவர் தமிழுக்குச் செய்த தொண்டு முழு அளவில் வெற்றிபெற வேண்டுமென்றால், எல்லோரும் தனித் தமிழில் பேச வேண்டும்; படித்த புலவர் பெருமக்கள் மட்டும் பேசினால் போதாது; சாதாரண பாமர மக்களும் மேடையேறிப் பத்து நிமிடமாவது பேசும் ஆற்றல் வரவேண்டும்”

என்று, மாண்புமிகு அமைச்சர் மா. முத்துசாமி அவர்கள் குறிப்பிட்டார்.

மறைமலையடிகளின் 17-ஆம் ஆண்டு நினைவு விழாவுக்குத் தலைமைவகித்து அமைச்சர் பேசுகையில் மேலும் கூறியதாவது:—

“அடிகள் நினைவை நாம் போற்றுகிறோமென்றால், வெறும் பேச்சளவில் மட்டும் இருந்துவிடுதல் கூடாது. நாளும் நல்ல தமிழ் நூல்கள் பல வெளிவர வேண்டும். அந்த நூல்கள் வெளிவரத் தமிழ்நாட்டில் உள்ள தமிழ் மக்கள் அத்தனைப்பேரும்—தம் தம் குடும்பங்களில் எத்தனைப் பேர் இருக்கிறார்களோ அத்தனை ரூபாய்களைத் தமிழ் வளர்ச்சிக்கு என்று ஒதுக்க வேண்டும்; அப்போததான், மக்களிடை தமிழ் உணர்ச்சி உண்மையாகப் பரவும்; நல்ல தமிழ் நூல்களும் பல வெளிவரும்”

விழா கோகலே மண்டபத்தில் தென்னிந்தியத் தமிழ்ச் சங்கத்தின சார்பில் 10—5—68 மாலை நடைபெற்றது.

விழாவிற்கு வந்திருந்த அனைவரையும் கழக ஆட்சியாளர் திரு வ. சுப்பையா பிள்ளை வரவேற்றுப் பேசினார்.

அவ்வமயம், ‘திருவாசக ஒளி நெறி, என்ற நூலை கவிஞர் சுத்தானந்த பாரதியாரும், ‘ஆட்சித் துறைத் தமிழ்’ என்ற நூலைத் திரு. மு. ரா. பெருமாள் முதலியாரும் வெளியிட்டனர். அந்நூல்களை முறையே சித்தாந்தப் பண்டிதர் ப. இராமநாத பிள்ளையும், கீ. இராமலிங்கனாரும் அறிமுகப் படுத்தினர்.

மறைமலையடிகளாரின் மாண்பு பற்றி, திரு. ஔவை து. நடராசன் பேசினார்.

கட்சிச் சார்பற்ற மீனவர் பாதுகாப்புக் குழு

மீனவர் பாதுகாப்புக் குழுவின் கட்சிச் சார்பற்ற பிரதிநிதிகள் கூட்டம், 12—5—68-ல், மயிலாப்பூர் தெற்கு மாடவீதி இராஜ இராஜேசுவரி பாடசாலையில் நடைபெற்றது. என். சீவரத்தினம் தலைமைவகித்தார்.

‘மீனவரும் தற்கால நிலையும்’ என்ற பொருள்பற்றிப் பல கிராமங்களில் இருந்துவந்த பிரதிநிதிகள் விவாதித்துச் சில முடிவுகள மேற்கொள்ளப்பட்டன.

அமைச்சர் சத்தியவாணிமுத்து அம்மையாரைச் சந்தித்து மீனவர் சமூக மக்களுடைய குறைபாடுகளை மனுமூலம் அளிப்பதற்காக என். சீவரத்தினம் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது.

செயலாளர் ஏ. நெடுஞ்செழியன் நன்றி நவின்றார்.

மின்பாறையில் கழகக் கூட்டம்

12—5—68-ல், ‘மின்பாறை தி மு க. சார்பில், கலைவாணர் திடலில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. திருமதி சம்பூர்ணம் சுப்பையன் தலைமைவகித்தார்.

தோழியர் தமிழரசி பி ஏ., வால்பாறைத் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் இ. இராமசாமி, மற்றும் மு. சுப்பையன், ஆ. அறிவரசு ஆகியோர், கழக ஆட்சியின் சாதனைகளை விளக்கிப் பேசினர்.

சேலத்தில் அண்ணா மணிவிழா

குழு அலுவலகத் திறப்பு

சேலத்தில் அறிஞர் அண்ணா மணி விழாக் குழு அலுவலகத் திறப்பு விழா 8—5—68 இரவு 9-மணிக்கு தோழர் எஸ். ஏ. அன்புக்கரசு தலைமையில் நடைபெற்றது.

திரு. சி. பி. சிற்றரசு எம்.எல்.சி. அவர்கள் அலுவலகத்தைத் திறந்துவைத்து, அண்ணா மணி விழா கொண்டாடவேண்டிய அவசியம் குறித்தும், அண்ணாவுக்கு அமைந்திருக்கும் சிறப்பான பண்புகள் குறித்தும், அமைந்திருக்கும் ஆற்றல் குறித்தும், உலகப் புகழ் குறித்தும் சொற்பொழிவாற்றினார்.

திரு. கே. செயராமன் எம்.எல்.ஏ, வள்ளுவர் உருவப் படத்தைத் திறந்துவைத்து உரை நிகழ்த்தினார்.

மற்றும் தோழர்கள் சிற்றுளி சுப்பிரமணியம், ஏ. மாரியப்பன் எம்.சி., பி. எஸ். மாணிக்கம் எம்.சி., சி. பழனியப்பன் எம்.சி., சின்னையன் (தமிழரசுக் கழகம்), பி. தண்டபாணி (சுதந்திரா) ஆகியோரும் பேசினர்.

குழுச் செயலாளர் எஸ். சி. ஆறுமுகம் அனைவரையும் வரவேற்றும், விழா நடத்தவேண்டியதன் அவசியம் குறித்தும் பேசினார்.

பாகிஸ்தானுக்கு அமெரிக்க உணவு

1.60 கோடி டாலருக்கு உதவி

இராவல்பிண்டி, மே 18—

மொத்தம் 40,000 டன் கோதுமை, கோதுமை மாவு ஆகியவற்றை அமெரிக்கா பாகிஸ்தானுக்கு அனுப்பும்.

பி. எல். 480 ஏற்பாட்டின்கீழ் வழங்கப்படும் இந்தக் கோதுமை, கோதுமை மாவின் மதிப்பு 2கோடி 60 இலட்சம் டாலர்களாகும்.

கிழக்குப் பாகிஸ்தானின்தேவையை நிறைவு செய்யவும், அதிகச் சரக்கை இருப்பில் வைத்துக் கொள்ளவும், விலைகளை நிலைப்படுத்தவும் இந்தக் கோதுமை இறக்குமதி செய்யப்படுகிறது.

விலையைக் குறைக்கப் புதிய சட்டம்

பிரிட்டிஷ் அரசு இயற்றுகிறது

இலண்டன், மே 20—

விலை உயர்வு, வருமானம் ஆகியவற்றைக் கட்டுப்படுத்த அரசுக்குத் தற்போதுள்ள அதிகாரத்தை வலுப்படுத்தும் புதிய சட்டம் ஒன்றை பிரிட்டிஷ் அரசு கொண்டு வருகிறது.

விலை உயர்வைக் கட்டுப்படுத்தும் இந்தப் புதிய சட்டத்தில், ஊதிய உயர்வு, மற்றும் பங்கு மார்க்கெட் இலாபம் இவற்றிற்கு உச்சவரம்பு ஏதும் குறிப்பிடப்படவில்லை; ஆனால், சாதாரண சூழ்நிலையில் ஊதிய உயர்வு 3½ சதவிகிதத்திற்குமேல் தேவையில்லை என்பது அரசின் கொள்கை.

“பவுன் மதிப்புக் குறைப்புக்குப் பிறகு உள்ள புதிய பொருளாதார சூழ்நிலையில் இந்தச் சட்டம் மிக முக்கியமானது” என்று அரசாங்க அறிக்கை ஒன்று கூறுகிறது.

தச்சநல்லூரில் சத்தியவாணிமுத்து மன்றம்

12—5—68 அன்று நெல்லையைச் சார்ந்த தச்சநல்லூர் அந்தோணியார் கோவில் தெருவில், சத்தியவாணிமுத்து மன்றத் துவக்க விழா, திரு. பெருமாள் தலைமையில் நடைபெற்றது.

தோழர் நக்கீரன் சத்தியவாணிமுத்து அம்மையார் உருவப் படத்தையும், மன்றத்தினையும் திறந்து வைத்து உரையாற்றினர்.

மற்றும் தோழர்கள் வீ. முருகு, எம். சாமுவேல், இராமுலு, மாசாசன் ஆகியோர் பேசினர்.

திரு. பாலகிருட்டினன் நன்றி நவின்றார்.

சாலை ஆய்வாளர் சங்கக் கூட்டம்

கிழக்கு இராமநாதபுரம் மாவட்ட சாலை ஆய்வாளர்கள் சங்கப் பொதுக் குழுக் கூட்டம் திரு. எஸ். உக்ர வீராசாமி தலைமையில் திரு. ஏ. ஆர். நடேன் செட்டியார் உயர்தர ஆரம்பப் பள்ளியில் நடைபெற்றது.

மாவட்டச் செயலாளர் வி. ஆர். என். வெங்கடாசலம் அனைவரையும் வரவேற்று, சங்கம் செயல்பட்ட விவரங்களை எடுத்துக் கூறி, அனைவரும் கடமையுணர்ச்சியுடன் செயல்பட வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

திரு. எஸ் உக்ர வீராசாமி அவர்களும், சிவகெங்கை தாலுகா தலைவர் வி. தாமோதரன் அவர்களும் பேசினர்.

1968—69-ம் ஆண்டிற்கு நிர்வாகிகள் தேர்தல் நடைபெற்றது; ஆர். சுவாமிநாதன் தலைவராகவும், வி. முருகேசன் துணைத் தலைவராகவும், வி. ஆர். என். வெங்கடாசலம் செயலாளராகவும், ஆர். ஜவகர் துணைச்செயலாளராகவும், கே. சண்முகம் பொருளாளராகவும், அ. அமிர்தசாமி மாநிலச் செயற்குழு உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

ஆராய்சித்துறைப் படிப்பு

160 ஆசிரியர்கட்குப்பணவுதவி

புதுடில்லி மே 20—

கலைத் துறை, சமூக விஞ்ஞானத் துறை ஆகியவற்றில் ஆராய்ச்சி நடத்துவதற்காக பல்கலைக் கழகங்களையும், கல்லூரிகளையும் சேர்ந்த ஆசிரியர்களுக்கு நிதியுதவி அளிக்கும் திட்டம் செயல்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்படி, 1968–69-ம் ஆண்டில் உதவியளிப்பதற்காக 160 ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

இவர்களுக்கு ரூ. 1,01,400 பண உதவி வழங்கப் பல்கலைக் கழகப் பண உதவிக் குழு அங்கீகரித்திருக்கிறது.

தேவாரம் தி.மா.மு.க. துவக்க விழா

தேவாரம் நகர் தி. மா. மு. க. துவக்கவிழாப் பொதுக்கூட்டம் தோழர் பி. பாண்டியன் தலைமையில் வ.உ.சி. திடலில் 14–5–68-ல் நடைபெற்றது.

தோழர் கா. காளிமுத்து பி.ஏ., அன்வர், தண்டாயுதபாணி, செயராம் ஆகியோர் பேசினர்.

பொள்ளாச்சியில் பொதுக்கூட்டம்

12—5—68-ல் பொள்ளாச்சி திருவள்ளுவர் திடலில் கண்ணப்பன் மன்றத்தின் சார்பாக ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது.

நகரமன்ற உறுப்பினர் சி. சதாசிவம் தலைமைவகித்தார்.

தோழர்கள் சு. நாவலர் நம்பி, சண்முகசுந்தரம், மயில்சாமி, இரத்தினம், கருணாலயம் ஆகியோர் பேசினர்.

முகவரி மாற்றம்

ஜீவா கலைமணி
(சட்டக் கல்லூரி மாணவர்),
11, பிரேமா லாட்ஜ்,
நுங்கம்பாக்கம், சென்னை-24.

மறைவு

குடவாசல் தொகுதிச்சட்டமன்ற உறுப்பினர் சி. கிருஷ்ணமூர்த்தி அவர்களின் பெண்மகவு 17-5-68 அன்று இயற்கையெய்திய செய்தி வருத்தத்துடன் அறிவிக்கப்படுகிறது.

சுயமரியாதை இயக்கம் தோன்றிய நாள்முதல் இயக்கத்தொண்டராகவும், பொதுநலத் தொண்டராகவும் வாழ்ந்த கீழாரால் தோழர் த. சி. வடிவேல், தமது 62-வது வயதில் 12—5—68 அன்று இயற்கையெய்தினார். அவரது குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் கீழாரால் தி. மு. க. சார்பில் ஆழ்ந்த அனுதாபமும் ஆறுதலும் தெரிவிக்கப்படுகிறது.

உரிமைக் குரலுக்கு வித்தூன்றினர் !

ஏற்றத்தாழ்வை ஒழிக்க அடிகோலினர்

கருத்துப் புரட்சி மூலம் பழைமையைச் சிதறடித்தார்

காரல்மார்க்சின் சிந்தனைக் கருவூலம்---150-வது ஆண்டு நினைவு நாள் விழாவில் அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் கருத்துரை

சென்னை, மே 20—

"சமுதாயம், அரசியல், பொருளாதாரத் துறைகளிலிருந்த புரட்டுக்களை -- ஏற்றத்தாழ்வுகளை ஒழிக்க அடித்தளம் போட்டவர் -- கருத்துப் புரட்சி உண்டாக்கியவர் காரல் மார்க்ஸ் !

"'சக்திக்கேற்ற உழைப்பு ; உழைப்புக்கேற்ற ஊதியம் தரவேண்டும்' என்றும், 'எட்டு மணி நேரம்தான் உழைப்பேன் ; எட்டு மணி நேரம் உறங்கவும், எட்டு மணி நேரம் ஓய்வுகொள்ளவும் வேண்டும்' என்றும் தொழிலாளர்கள் உரிமைக் குரலெழுப்ப வித்தூன்றியவர் காரல் மார்க்ஸ் !

"சக்திக்கேற்ற உழைப்பு -- உழைப்புக்கேற்ற ஊதியம் வேண்டும் —என்று குரலெழுப்பிய அவர், 'அது எந்தக் கட்டத்தை நோக்கிப் போகவே டும்' என்றும் விளக்கினர் ; 'சக்திக்கேற்ற உழைப்பு -- தேவைக்கேற்ற ஊதியம் வேண்டும் ; அந்த இடத்தை நோக்கி நடக்க வேண்டும்' என்ருர் ! அந்த நோக்கத்தை நோக்கி நாம் செல்ல -- அந்த நோக்கம் ஈடேற உறுதி எடுத்துக்கொள்ள இந்த நூற்ருண்டு விழா மெத்தப் பயன்படும் !"

இவ்வாறு கல்வியமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள்' மே 17-ம் நாள் கோகலே மண்டபத்தில், காரல் மார்க்ஸ் 150-வது ஆண்டு நினைவு நாளையொட்டி நடைபெற்ற கருத்தரங்கைத் துவக்கி வைத்து உரையாற்றுகையில் தெள்ளத் தெளிவுறக் குறிப்பிட்டார்.

விழாக் கருத்தரங்கு, தா. பாண்டியன் தலைமையில் நடைபெற்றது.

விழாவில் மேயர் அபிபுல்லா பேக், சோவியத் தூதுவர் ஜி. ஐ. கவேரின், ஜெர்மன் குடியரசைச் சேர்ந்த :யேக், திரு. ம. பொ. சிவஞானம் எம்.எல்.ஏ., ஏ. என். சட்டநாதன், வி. கே. கிருஷ்ணமூர்த்தி, ஏ. சீனிவாசன், கோவிந்தசாமி ஆகியோர் பேசினர்.

அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் மேலும் பேசுகையில் விளக்கியதாவது :—

மகிழ்ச்சி--அதிர்ச்சி!

காரல் மார்க்ஸ் என்ற பெயர் ஒரு சாராருக்கு மகிழ்ச்சியையும், மற்ருெரு சாராருக்கு அதிர்ச்சியையும் தருவதாகும்.

காரல் மார்க்சின் சிந்தனை—நோக்கம் எப்படிப்பட்டது என்பதனை தெளிவுபட விளக்கும் அரும்பெரும் நூல், 'மூலதனம்' எனும் நூலாகும்.

'மூலதன'த்தின் மூலத்தைப் புரிந்துகொள்வது சாதாரண மானவர்களுக்கு மிகவும் கடினமாகும் ; அந்நூலுக்குப் பல தெளிபொருள் விளக்க நூல்கள் வெளிவரவேண்டும் ; அப்போதுதான் பாமர மக்களும் அதைப் படித்துப் புரிந்து கொள்ள முடியும்.

சொல்லுக்குச் சொல் !

'கடுகைத் துளைத்து ஏழ்கடலைப் புகுத்தி குறுகத் தரித்த குறள்' என்று புலவரொருவர், குறளின் பெருமையை எடுத்துரைத்தார்.

வேருெருவரோ 'அடுகும் பெரிய பொருள்' என்று கருதி, 'அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகுத்தி குறுகத் தரித்த குறள்' என்ருர். அந்த அளவுக்குத் திருக்குறளில் கருத்துச் செறிவுள்ளது.

அதுபோலத்தான் காரல் மார்க்சின் 'மூலதனம்' சொற்ருெடருக்குச் சொற்ருெடரல்ல ; சொல்லுக்குச் சொல் ஆராய்ச்சி செய்யப்பட்டு, தெளிவான முடிவோடு தேர்ந்தெடுக்கப்பட்டு கையாளப்பட்டிருக்கிறது.

ஒரு பக்கத்தை முழுமையாகப் படித்துவிட்டு அடுத்த பக்கத்திற்குச் செல்லமுடியாது ; மீண்டும் மீண்டும் அந்தப் பக்கத்தையே படித்தால்தான் புரிந்து கொள்ள முடியும்.

தொழிலாளர் அறிய !

"கார்ல் மார்க்ஸ், பெரும் அறிஞர் — கற்றறிவாளர் — தத்துவ மேதை மட்டுமல்ல ; தொழிலாளர்களின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டவர்" என்றுதான் இன்றையத் தொழிலாளர்கள் அறிவார்களே தவிர, 'அவர் என்ன சொன்னர்' என்பதனை அறியமாட்டார்கள் !

ஆகவே, 'தொழிலாளர் வர்க்கம் அதைப்பற்றிப் புரிந்துகொள்ள அந்த நூலுக்குத் தெளிவான விளக்க நூல் தமிழில் தேவை' என்று நண்பர் கவேரின் அவர்களிடம் பேசிக்கொண்டிருக்கும் போது குறிப்பிட்டேன்.

உழைப்பின் விளைவு !

"நாற்பதாண்டுக் கால உழைப்பின் விளைவாகக் கிடைத்தது 'மூலதனம்' ; இரவெல்லாம் கண் விழித்து—விடிய விடிய எழுதியிருக்கிருர் கார்ல் மார்க்ஸ்" என்று அவரது வாழ்க்கை வரலாறு கூறுகிறது !

பழைமை சிதறியது !

இருந்த நிலையைச் சிந்தித்து, எதிர்காலத்தில் இருக்க வேண்டிய நிலைபற்றி ஆராய்ந்தெடுத்துரைத்தார் அவர் !

அவரது பல கருத்துக்கள், பழைமையைச் சிதறடித்தது !

'ஆண்டான்–அடிமை ; உயர்ந்தவன்–தாழ்ந்தவன்' என்ற நிலையையும் மூடப் பழக்க வழக்கங்களையும், மக்களை அலட்சியப்படுத்தியவர்களின் ஆதிக்கத்தையும் எதிர்த்து அவர் சொன்ன புரட்சிக் கருத்துக்கள் பழைமையைச் சிதறடித்தன !

முயற்சியின் முழுவடிவம்

'உழைப்பாளர் வர்க்கம் சீர்கெட்டது ஏன்' என்பதனை ஆராய்ந்து, 'அந்தச் சீர்கேடான நிலையைச் சாட வழிவகைகளை எடுக்கவேண்டும்' என்ற முயற்சியின் முழு வடிவம்தான் 'மூலதன'மாகும் !

இப்படிப்பட்ட புரட்சிக் கருத்துக்களால் அவர் பிறந்த நாடான ஜெர்மானிய நாட்டிலேயிருந்து நாடு கடத்தப்பட்டார் ! கடத்தப்பட்ட அவர், இலண்டன் மாநகரத்திலே தொடர்ந்து 'மூலதன'த்தை எழுதினர் !

ஐரோப்பாவில் 18—19-ம் நூற்ருண்டில் நடந்த தொழிற் புரட்சி பற்றிய குறிப்பேடுகளை எல்லாம் பிரிட்டிஷ் நூல் நிலையத்திலிருந்தையும் பெரும் பணம்கொடுத்து வாங்கியும் படித்தார்.

சிந்தனையைத் தூண்டி !

ஆழ்ந்த சிந்தனைக்கும் — விடா முயற்சிக்கும் எடுத்துக்காட்டாகத் திகழ்பவர் காரல் மார்க்ஸ் !

மக்களின் சிந்தனையைத் தூண்டிவிட்டு—பழைமை எண்ணங்களை மாற்றி—புத்துலகைப் படைக்கும் கருத்துப் புரட்சியைச் செய்தவர் காரல் மார்க்ஸ் !

சமுதாயம் — அரசியல் — பொருளாதாரத் துறைகளை ஆராய்ந்து அங்கெல்லாம் இருக்கின்ற குறைகளைப் போக்க வழிவகைகளைக் கூறிடும் இலக்கணத்தை மார்க்ஸ் தந்திருக்கிருர் ; அந்த இலக்கணத்தை வைத்துக் கொண்டு இலக்கியங்களை உருவாக்கித்தர வேண்டும்.

உழைப்புக்கு விலை எது?

இந்தியாவிலிருந்த பிரிட்டிஷ் காலனி ஆதிக்கத்தைப் பற்றியும், அது வளர்ந்து வரும் தன்மை பற்றியும், இந்நாட்டு மக்கள் விழிப்புணர்ச்சி அடைந்து வருவது பற்றியும், 1857-ம் ஆண்டு நடைபெற்ற 'பட்டாளப் புரட்சி' பற்றியும் மார்க்ஸ் பல கட்டுரைகளை எழுதியிருக்கிருர்.

"உலகத்திற்கு விலை இல்லை ; உழைப்புக்குத் தருகிற விலைதான் உலகத்தின் விலை" என்ருர் மார்க்ஸ் !

காட்டிலிருக்கும் மரத்துக்கு மதிப்பில்லை ; ஆனல், மரம் நன்ருக இழைக்கப்பட்டு மேஜையாக—நாற்காலியாக—கட்டிலாக பல்வேறு தொழிலாளர்களின் உழைப்பின் மூலம் உருவான பிறகுதான், அந்த மரத்திற்கு மதிப்பு ஏற்படுகிறது ! அதிலே உழைப்புக்குத்தான் மதிப்பு—விலை !

கருத்துப் புரட்சி !

உழைத்தவனுக்குக் கிடைக்காத பயன், உழைக்காத வர்க்கத்திற்குக் கிடைப்பதைச் சாடியவர் காரல் மார்க்ஸ் !

"இதெல்லாம் தொழிலாளருடைய தலையெழுத்தல்ல ! உணர்ச்சி கொண்டு எழு ! உரிமைக்குப் போராடும் துணிவைப் பெறு" என்ற கருத்துப் புரட்சியை அவர் உண்டாக்கினர் !

நான் சிறையிலிருக்கும்போது பலமுறை காரல் மார்க்சின் மூலதனத்தைப் படித்திருக்கிறேன் ; இன்னும் படித்து மேலும் புரிந்து கொள்ள வேண்டுமென்று தோன்றுகிறது.

மாவீரன் லெனின் !

காரல் மார்க்சின் முயற்சிக்கு—கொள்கைக்கு வெற்றி தேடித் தந்தவர் மாவீரன் லெனின் !

பின்தங்கியிருந்த சோவியத் ரஷ்யாவை முன்னணிக்குக் கொண்டுவந்து புத்துலகம் படைத்தவர் லெனின் !"

'உணவுக் கிளர்ச்சி

பிரிவினை கோரும் கிளர்ச்சியாக உருப் பெறக்கூடும்'

மத்திய அரசுக்கு நம்பூதிரிபாடு எச்சரிக்கை

புதுடில்லி, மே 20—

"மத்திய அரசு, தொடர்ந்தாற் போல் கேரள மக்களுக்கு அதிக உணவு வழங்க மறுத்து வருமானல், கேரள மக்கள் நடத்தி வரும் உணவுக் கிளர்ச்சி, பிரிவினை கோரும் கிளர்ச்சியாக உருப்பெறக் கூடும் ; இதற்கான சாத்தியக் கூறுகளைத் தள்ளிவிட இயலாது"

என்று கேரள முதலமைச்சர் நம்பூதிரிபாடு, செய்தியாளர்களிடம் கூறியுள்ளார். அவர் மேலும் கூறியிருப்பதாவது :—

"இந்த ஆண்டில் நல்ல விளைச்சலிருந்தாலும், கேரள மக்களுக்குப் பாதி அளவுக்குத்தான் 'ரேஷன்' தரப்படுகிறது ; அதற்கும்கூடக் கேரள மக்கள், கூடுதலான விலையைத் தருகின்றனர் !

"இப்படிப்பட்டதோர் பாகுபாடு காண்பிக்கப்படும்போது, 'மத்திய அரசுடன் இணைந்திருக்கக் கூடாது' என்று கேரள மக்கள் கருதவார்களானல், உலகில் உள்ள எந்தச் சக்தியும், கேரள மக்கள் அவ்வாறு கருதுவதைத் தடுத்துவிட முடியாது !

திருமணங்கள்

காரமடைத் தோழர் **சின்ன. இராமசாமிக்கும்**—தோழியர் **மங்கையர்க்கரசிக்கும்** 22—5—68-ல் நாச்சிப்பாளையம் கணுவங்கரை ஐயங்காடு தோட்டத்தில், திரு. கு. **தங்கவேலு** பி.ஏ.பி.எல். அவர்கள் தலைமையில் திருமணம் நடைபெறும்.

பகல் 12-மணிக்கு காரமடை மணமகன் இல்லத்தில் நடைபெறும் வரவேற்பு விழாவில் செ. **இராசமாணிக்கம்** தலைமையில் அமைப்புச்செயலாளர் **என். வி. நடராசன்** அவர்கள் வாழ்த்துரை வழங்குவார்கள்.

*

திருவெண்ணெய்நல்லூர் நூலகப் பொறுப்பாளர் தோழர் **தி. சாமிநாதனுக்கும்**—தோழியர் கஸ்தூரி என்னும் **கண்ணகிக்கும்** 22—5—68-ல் தென்புத்தூர் வள்ளலார் மடத்தில் வழக்கறிஞர் **வி. முனுசாமி** எம்.எல்.ஏ. தலைமையில் திருமணம் நடைபெறும் ; பலர் வாழ்த்துரை வழங்குவர்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பத்திரிகைகட்குவிடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

மேலும் முதலமைச்சர் தொழிலாளர் பிரதிநிதிகளுடன் பேசி, பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான ஒரு முடிவினை எடுக்கச் சிறிது அவகாசம் கொடுக்கவேண்டும் என்றும் குழு கருதியதால், இந்த வேலை நிறுத்தம் தள்ளிப்போடப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கட்சிச் சார்பற்ற முறையில் நகராட்சி தேர்தல்

கழகத்தின் கருத்துப் பற்றி இந்திரா காந்தி

சென்னை, மே 19—

நகராட்சி மன்றத் தேர்தலில் அரசியல் கட்சிச் சார்பற்ற முறையில் போட்டியிட வேண்டும் என்ற கழகத்தின் கருத்தைத் தாம் ஆதரிப்பதாகவும், ஆனல் இது நடைபெறக் கூடியதா எனத் தாம் ஐயுறுவதாகவும், தலைமையமைச்சர் திருமதி இந்திரா காந்தி இங்கு கருத்தறிவித்தார்.

சிங்கப்பூருக்குப் புறப்படுவதற்கு முன் செய்தியாளர்கள் அவரைச் சந்தித்துப் பேசிக்கொண்டிருக்கையில், கட்சிச் சார்பற்ற முறையில் நகராட்சித் தேர்தல்கள் நடக்க வேண்டும் என்று அண்ணா அவர்கள் வலியுறுத்திவருவது குறித்து அவரிடம் கருத்தறிவிக்குமாறு கேட்டனர்.

அதற்குப் பதிலளிக்கையில் மேலும் அவர் கூறியதாவது :—

"எவரும் எந்த ஒரு கட்சியையும் சாராதிருக்கக்கூடும் என நான் நம்புவதற்கில்லை. ஒவ்வொருவரும் ஏதேனும் ஓர் அரசியல் கொள்கையையுடையவராகத்தான் இருப்பார்கள்.

"மேலும், எல்லா அரசியல் கட்சிகளும் இந்தக் கருத்துக்கு உடன்பாடு தெரிவிக்க வேண்டும். அதன் பிறகுதான், இதில் ஏதேனும் செய்யமுடியும்."

"பெரிய கட்சியான காங்கிரசு, இதில் ஏன் முன்னிருந்து வழிகாட்டக் கூடாது?" என்று கேட்டதற்கு அவர் கூறியதாவது :—

"எல்லாக் கட்சிகளும் ஒன்று சேர்ந்து ஓர் உடன்பாட்டுக்கு வந்தாலொழிய இக்கருத்தினைச் செயல்படுத்த இயலாது."

60 அரிசி மூட்டைகள் கைப்பற்றப்பட்டன

சென்னை, மே 20—

கள்ளக் கடத்தல் தடுப்பு—கண்காணிப்புப் பிரிவினர், ஞாயிறன்று காலையில், மூன்று 'பார வண்டி'களை வழிமறித்துச் சோதனையிட்டு அவற்றிலிருந்த 60 அரிசி மூட்டைகளைக் கைப்பற்றினனர்.

'பெர்மிட்' இல்லாமல் அந்த அரிசி மூட்டைகள், திருப்பெரும்புதூரிலிருந்து சைதாப்பேட்டை தாலுகாவுக்கு அவ்வண்டிகளில் கொண்டு செல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இந்த அரிசி மூட்டைகளின் மதிப்பு ரூ. 4,500 ஆகும்.

கடந்த வெள்ளியன்று, காலாவதியான 'பெர்மிட்'டுடன், ரூ. 4,000 பெறுமானமுள்ள 25 குஜி மூட்டைகளுடன் பெங்களூரிலிருந்து சென்னைக்கு வந்துகொண்டிருந்த ஒரு லாரியையும் அவர்கள் வழிமறித்து, அதிலிருந்த சரக்குகளைக் கைப்பற்றினர்.

ரோஜா
பாக்கு & புகையிலை
REGD. NO. 116331 ROJA
N. V. K. M. & சன்ஸ், திண்டுக்கல்

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.